**தலைப்பு 023 – கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு - 2024**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 023 – கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உ றுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மற்றும் மூலதன செலவின விடயமொன்றுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,000,000 தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடும் எதுவித பயன்பாடுமின்றி எஞ்சியிருந்தது. | வாகன பழுதுபார்த்தல்கள் குறைவடைதல், புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செலவினம் இல்லாதிருந்தமை இதற்கு காரணமாக அமைந்திருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மற்றும் நடைமுறைக்கு சாத்தியமான வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 16 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 03 மூலதன செலவின விடயங்களுக்கு மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் அந்த செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாடுகளின் பயன்பாட்டின் பின்னர் ரூபா 38,766,831 கூட்டுத்தொகை எஞ்சியிருந்தது. அந்த சேமிப்பு ஒவ்வொரு செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டின் 13 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது. | மீண்டெழும் செலவின விடயங்களின் சேமிப்புகளுக்கு, பதவியணியை ஆட்சேர்ப்பு செய்யாமை, வெளிநாட்டு பயிற்சிகளுக்கு சந்தரப்பம் கிடைக்காமை, வாகன பழுதுபார்த்தல்கள் குறைவடைந்தமை போன்ற காரணங்களும் மூலதன செலவின விடயங்களின் சேமிப்புகளுக்கு புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்கள் இல்லாதிருந்தமை, ஆண்டினுள் கொள்வனவுகள் குறைவடைந்தமை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வளப் பங்களிப்பாளர்களை பெற்றுக்கொள்வதில் நிலவிய | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான மற்றுழ் நடைமுறைக்கு சாத்தியமான வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

சிக்கல்கள் ஆகியன பிரதானமாக தாக்கமளித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

| அவதானிப்பு | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமை** | | |
| அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை<br><br>2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் 7.2 ஆம் பிரிவு | 789,689 | ஏனைய வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு சேகரிக்கப்பட்ட வருமானங்கள், கட்டுநிதி இணக்கக்கூற்றில் காண்பிக்கப்படாத நிதிச் செயலாற்றல் கூற்றின் வரியல்லாத வருமானம் மற்றும் ஏனையவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | சீராக்கங்கள் திருத்தப்பட்ட போதிலும், கணக்கு வைக்கும் போது இடமாற்றங்களை திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை**

அரசியலமைப்புச் சட்டத்தின் 153(இ) உறுப்புரையின் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்கு கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் சாட்டப்பட்டிருந்தது. அந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) விதிகள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படல். | | |
| அரசியலமைப்புச் சட்டத்தின் 153(இ) ஆம் உறுப்புரைக்கமைய ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுக்காக | இலங்கை அரச கணக்காய்வு சேவைக்குரிய அங்கத்தவர்களின் மற்றும் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினால் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சரவையால் முறைமைப்படுத்தப்படும் கொள்கைகளுக்கு இணங்க இலங்கை அரச கணக்காய்வு சேவைக்குரிய அங்கத்தவர்களின் சேவைக்கு ஆட்சேர்க்கும் நடைமுறைகள், நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றல்கள், ஒழுக்கக் கட்டுப்பாடுகள் மற்றும் சேவையிலிருந்து வறிதாக்கல் ஆகியவற்றுக்குரிய விதிகள் தயாரிக்கப்பட்டு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 48 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் செயல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு உரிய அங்கீகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த விதிகள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்க்கப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களினதும் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றல்கள், ஒழுக்கக் கட்டுப்பாடுகள் மற்றும் சேவையிலிருந்து வறிதாக்கல் ஆகியவற்றுக்குரிய விதிகளை உள்ளடக்கிய கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் செயல்நடைமுறைக் கோவையின் வரைபானது 2024 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், அதனை ஆணைக்குழுவில் கலந்துரையாடப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரச கணக்காய்வு பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான மத்திய நிலையமொன்றை நிறுவுதல் மற்றும் மத்திய நிலையத்தின் முகாமைத்துவத்திற்கான விதிகளை தயாரித்தல். | | |
| | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி மற்றும் கணக்காய்வு தொடர்பான துறையின் மனிதவள இயலுமைகளை மேம்படுத்தும் எண்ணத்துடன் கணக்காய்வு அலுவலகத்தின் கீழ் அரச கணக்காய்வு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையமொன்று நிறுவப்பட வேண்டுமெனவும், குறித்த நிலையத்தின் முகாமைத்துவத்திற்குரிய விதிகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறானதொரு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையமொன்று தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் நிறுவப்பட்டிராமையால் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 47(1) ஆம் பந்தியின் பிரகாரம், அரச நிதி மற்றும் கணக்காய்வு துறையின் மனிதவள இயலுமைகளை மேம்படுத்தும் எண்ணத்துடன் கணக்காய்வு அலுவலகத்தின் கீழ் அரச கணக்காய்வு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையமொன்று நிறுவப்பட வேண்டுமென்பதுடன், அதன் 2 ஆம் பந்தியின் பிரகாரம் அந்த மத்திய நிலையத்தின் முகாமைத்துவத்திற்குரிய விதிகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட வேண்டும். அதற்கமைய தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கீழ் அந்த பயிற்சி நிலையம் தாபிக்கப்பட்ட பின்னர், | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அதற்குரிய விதிகளை தயாரிப்பதற்கு கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு செயற்படத் தவறியிருந்தது. | அதற்குரிய விதிகளை தயாரிப்பதற்கு கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | |

(இ) சேவையில் நிரந்தரமாக்கல்

| | | |
|---|---|---|
| முன்னைய சேவை பிரமாணத்திற்குரியதாக இணைத்துக்கொள்ளப்பட்ட இலங்கை அரச கணக்காய்வு சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் 73 கணக்காய்வு உத்தியோகத்தர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கு, கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவிற்கு இயலுமா என்பது தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டிருந்தாலும், 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சட்டமா அதிபரின் அறிவுரை கிடைக்கும் வரையிலும் சேவையில் நிரந்தரமாக்கும் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | சட்டமா அதிபரின் அறிவுரை கிடைக்கும் வரையிலும் சேவையில் நிரந்தரமாக்கும் பணிகளை நிறைவு செய்வதற்று சட்ட ரீதியான தடையொன்று நிலவுவதுடன், அதன் அறிவுரைகளை துரிதமாக வழங்குமாறு சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | சட்டமா அதிபரின் அறிவுரையை பெற்று அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2024 ஆம் ஆண்டின் போது 12 அலுவலக உபகரண உருப்படிகள் பல்வேறு அளவுகளில் கொள்வனவு செய்வதற்காக 02 தனியார் கம்பனிகளுக்கு ரூபா 2,127,074 கூட்டுத்தொகை (வரியுடனான) செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| இந்த பெறுகைக்குரிய விலைக்கேள்வி ஆவணத்தின் நிபந்தனையொன்றாக தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்களால் விலைக்கேள்வி கையளிப்பு | இந்த பெறுகைக்குரிய விலைக்கேள்வி ஆவணத்தின் நிபந்தனையொன்றாக தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்களால் விலைக்கேள்வி கையளிப்பு | விலைக்கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருட்களை ஒப்படைக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி முதல் மூன்று நாட்களினுள் உரிய பொருட்கள் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு கொண்டுவந்து ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும், உரிய காலத்தினுள் பொருட்களை கொண்டுவந்து ஒப்படைக்காத வழங்குநர்களிடமிருந்து ஒரு நாளைக்கு விலைக்கேள்வி கையளிக்கப்பட்ட தொகையில் 0.05 சதவீதத்தினை தாமதக் கட்டணமாக அறவிடுவதற்கு நேரும் எனவும், அறவிடப்படும் ஆகக் கூடிய தாமதக் கட்டணம் விலைக்கேள்வியின் பெறுமதியின் 10 சதவீதம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், இந்த பெறுகையின் போது பொருள் பெறுவனவுப் பத்திரங்களை வழங்காது மற்றும் பொருட்களை ஒப்படைத்த காலத்தினை அடிப்படையாக கொண்டு தாமதக் கட்டணத்தை அறவீடு செய்யும் நிபந்தனை தொடர்பில் கவனம் செலுத்தாத வழங்குநர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பற்றுச்சீட்டுகளின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி முதல் 03 நாட்களினுள் உரிய பொருட்கள் கொண்டுவந்து ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும், அவ்வாறல்லாத போது 0.05% சதவீத தாமதக் கட்டணமாக அறவிடுவதற்கு நேரும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்தக் பெறுகையுடன் தொடர்பான பொருட்கள் எங்கள் விவரக்குறிப்புகளின்படி புதிதாக தயாரிக்கப்பட வேண்டியிருந்ததால், அவற்றை 03 நாட்களுக்குள் வழங்குவது நடைமுறைக்கு சாத்தியமில்லை. எனவே, இந்தக் பெறுகை தொடர்பான விலைக்கேள்வி ஆவணத்தில் தவறுதலாக சேர்க்கப்பட்டதாக விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் குறிப்பிடப்பட்டிருந்தமையால், அதன்படி, எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுதகள் ஏற்படக்கூடாது என்று விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | காலத்தினை அடிப்படையாக கொண்டு தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கையில் அரச இலத்திரனியல் பெறுகைகள் கட்டமைப்பினை செயற்படுத்தல் தொர்பில் வெளியிடப்பட்டிருந்த 2024 பெப்ரவரி 06 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 08/2019(ii) இன் மூலம் 2023 ஏப்ரல் 19 ஆந் திகதிய 08/2019(i) ஆம் இலக்க மற்றும் 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 08/2019 ஆம் இலக்கம் தொடர்பில் கவனம் செலுத்தாது ஆணைக்குழுவினால் 2024 ஆம் ஆண்டின் போது விலை ஒப்பீட்டு முறையின் அடிப்படையில் 24 சந்தர்ப்பங்களில் ரூபா 8,287,646 கூட்டுத்தொகையான பெறுகைகள் e – Gp கட்டமைப்பினை பயன்படுத்தாது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு புதிதாக நிறுவப்பட்ட நிறுவனம் என்பதாலும், அந்த நேரத்தில் போதுமான பணியாளர்கள் இணைக்கப்படாததாலும், அவசர மற்றும் உடனடி பணிகள் மற்றும் விநியோகங்களுக்கு விலை ஒப்பீட்டு முறையின் கீழ் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் e-GP கட்டமைப்பு மூலம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின்படி பெறுகை நடவடிக்கைகளுக்கு e-Gp கட்டமைப்பைப் பயன்படுத்த வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 பெப்ரவரி 14 முதல் 2026 பெப்ரவரி 14 வரை 02 ஆண்டுகளுக்கு அதிகபட்சமாக 3000 கி.மீ. மாதாந்த ஓட்டம் கொண்ட ஒரு வேன், ரூபா 318,600 (வற் உள்ளடங்களாக) மாத வாடகை அடிப்படையில் செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும், 2024 ஆம் ஆண்டில் இந்த வாகனத்தின் சராசரி மாதாந்திர ஓட்டமானது 793 கி.மீ. எனும் மிகக் குறைவான அளவில் காணப்பட்டது. | ஆணைக்குழுவிற்கு சொந்தமாக வாகனங்கள் இல்லாதிருந்தமையால், அண்ணளவாக மாதத்திற்கு ஓட்ட வேண்டிய கிலோமீட்டர் எண்ணிக்கையை தீர்மானிக்க முடியாதிருந்தமையால், 3000 கி.மீ. அளவு சேர்க்கப்பட்டிருந்தாலும், ஒப்பந்தம் மீண்டும் கையொப்பமிடப்படும்போது அதற்கேற்ப அந்தத் தொகையை மாற்ற முடியும். | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் இரண்டு மூலதனச் செலவின விடயங்களின் பாதிடப்பட்ட மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 15,000,000 கூட்டுத்தொகையாக காணப்பட்டதுடன், அது பெறுகைகள் திட்டத்தில் காணப்படும் மதிப்பீடுகளுடன் ஒப்பிடப்படும் போது ரூபா 2,720,000 ஆன வேறுபாடொன்று நிலவியமை அவதானிக்கப்பட்டது. | அந்த நேரத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு போதுமானதாக மாத்திரம் மூலதனச் செலவின விடயமொன்றாக தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் பொறிகளை கொள்வனவு செய்வதற்கான பெறுகைகள் திட்டத்தைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சரியான பெறுகை மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாக்குதல் | | |
| (i) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதிய பொருட் பட்டியல் புத்தகம் மற்றும் CIGAS கட்டமைப்பின் நிலையான சொத்துக்களின் கீழ் BOS Report உடன் ஒப்பிடும் போது 12 சொத்து உருப்படிகளுக்குரிய 26 சொத்துக்களின் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | BOS Report இன் இரண்டு இடங்களில் ஒரே சொத்து காட்டப்பட்டுள்ளதால், பன்னிரண்டு உருப்படிகளில் சொத்து வேறுபாடுகள் அவதானிக்கப்படுவதுடன், இதனை இதற்கு முன்னர் திறைசேரிக்கு அறிவித்து திருத்தம் | பொருட் பட்டியல் புத்தகம் மற்றும் CIGAS கணினி கட்டமைப்பில் உள்ளிடப்பட்ட நிலையான சொத்து பதிவேடுகள் திருத்தப்பட்டு நாளதுவரையாக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | செய்யப்பட்டிருந்தாலும், மீண்டும் அது காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ii) | CIGAS மென்பொருள் மற்றும் பொருட் பட்டியல் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து உருப்படிகளின் பெயர்கள் ஒன்றுக்கொன்று பொருந்தாமையால் CIGAS கட்டமைப்பின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படும் அறிக்கைகளை பொருட் பட்டியல் புத்தகத்துடன் இணக்கம் செய்தல் கணக்காய்வின் போது சிரமமாக காணப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துகள் குறியிடப்பட வேண்டும் மற்றும் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் இருப்புப் புத்தகங்கள் அந்த குறியீடுகளுடன் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |
| (iii) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட CIGAS BOS அறிக்கையின் பிரகாரம் 21 UPS உருப்படிகள் மற்றும் 16 Visitors Chairs உருப்படிகள் இரண்டு சொத்துத் தலைப்புகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டமையால் இரட்டை கணிப்பிடப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய அறிக்கைகள் திருத்தப்பட வேண்டும். |
| (iv) | CIGAS கணினி கட்டமைப்பிலிருந்து உருவாகும் சொத்து குறியீடுகள் பௌதீக சொத்துக்களில் இடப்பட்டிராமையால் சொத்துக்களை இனங்காணல் மற்றும் உரிய சந்தர்ப்பத்தில் சொத்துக்களை முறையாக கைத்தவிர்ப்பதற்கு போன்றே, பொருள் மெய்மையாய்வின் போது சொத்துக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தடையொன்றாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணினி அமைப்பால் உருவாக்கப்பட்ட சொத்து குறியீடுகளை பௌதீக சொத்துக்களுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31ஆந் திகதியளவில் ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த பதவியணியில் 33 வெற்றிடங்கள், அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 68 சதவீதமான வெற்றிடங்கள் நிலவின.<br><br>இவ்வாறு வெற்றிடங்கள் நிலவுதல் ஆணைக்குழுவின் செயலாற்றலுக்கு தாக்கமளிக்குமெனின் எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், அவ்வாறல்லாதுவிடின் அந்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதும் பொருத்தமானதாகும். | தேவையான பதவியணியை முகாமைத்துவ சேவைகள் திணைகளத்தினால் 2023.03.15 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு சந்தர்ப்பங்களில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பில் பொரு நிர்வாக அமைச்சிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |